[27th August 1970

சுசீந்திரம் S. M. S. M. உயர்நிலைப் பள்ளி

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) கன்னியாகுமரி மாவட்ட சுசீந்திரம் எஸ்.எம்.எஸ்.எம் உயர் நிலைப் பள்ளி ஆசிரியர் எண்ணிக்கை (Staff fixation) நிர்ணய உத்தரவால் எட்டு ஆண்டுகள் தொடர்ந்து வேலை பார்த்து வந்த நிரந்தர ஆசிரியர் ஒருவர் வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார் என்று அப்பள்ளி நிர்வாகியிடமிருந்து முறையீடு வந்ததுண்டா ?

(இ) அம்முறையீட்டின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 2 அதிகப்படியான நடுத்தரப்பள்ளி ஆசிரியர்களையும் 1 உயர் நிலைப்பள்ளி ஆசிரியரையும் 1968-69-ம் வருடத்தில் தொடர்ந்து பணி யில் வைத்துக் கொள்ள அப்பள்ளிக்கு தனி முறையாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

Tamil Teachers with Post-Graduate Qualification

*15. *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether the usual grant of two advance increments to the highly qualified teachers is denied to any of the Tamil Teachers, working in Government (Board) High School in Tirunelveli district for the reason that they do not have the B.T. qualification though they have the post-graduate qualification ; and

(*b*) if so, whether there is any proposal to grant such advance increment to those Tamil Teachers as they have the necessary training for language teachers ?

எம். ஏ. பட்டம் பெற்ற தமிழாசிரியர்கள்

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) தமிழாசிரியர்களாகப் பணி புரிபவர்களில் எம். ஏ. பட்டம் பெற்ற பின்னர் பி.டி. பயிற்சி பெறவில்லை என்ற காரணம் காட்டி, உயர் படிப்புடையவர்களுக்கு வழங்கும் இரண்டு ஊதிய உயர்வு, திருநெல்வேலி மாவட்ட இன்றைய அரசினர் உயர்நிலைப் பள்ளி (முன் னாள் கழகப் பள்ளி) ஆசிரியர்களில் எவருக்கேனும் இரண்டு ஊதிய உயர்வு மறுக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், தமிழாசிரியர்கள் மொழியாசிரியர்கள் பயிற்சி பெற்றிருப்பதால் அவர்களுக்கும் இவ்வூதிய உயர்வு வழங்கும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

27th August 1970]

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தற்பொழுதுள்ள ஆணையின்படி பிற மாவட்டங்களில் உள்ளது போல திருநெல்வேலியிலும் தமிழ் ஆசிரியர்களும் பிற மொழி ஆசிரியர்களும் பி.டி. (B.T.) அல்லது பி.ஈடி. (B.Ed.) பட்டம் பெற்றால் மட்டுமே உயர் படிப்புடையவர்களுக்கு வழங்கப்பெறும் இரண்டு ஊதிய உயர்வுகளை முன் கூட்டியே பெற இயலும்; எம். ஏ. முதலிய பட்டங்கள் பெற்றால் அவ்வூதிய உயர்வுகளை அவர்கள் பெற இயலாது. எம். ஏ. போன்ற பட்டங்களைப் பெறும் மொழி ஆசிரியர்களுக்கும் அவ்வூதிய உயர்வுகளை வழங்குவது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : துணைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் முதல்நிலைத் தமிழாசிரியர்களாக இருக்கிறவர்கள் தமிழில் வித்வான் பட்டம் அல்லது மொழி ஆசிரியர் பயிற்சி பெற்றிருந்தால், அவர்கள் 'பி.டி.' ஆசிரியர்களுக்கு ஒப்பாக நடத்தப்படுகிறார்கள். அதற்குப் பிறகு அத்தமிழாசிரியர்கள் எம்.ஏ. பட்டமும் பெற்றால், தற்போது பி.டி. ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது போன்ற இரண்டு ஊக்க ஊதிய உயர்வு கொடுக்கப்பட வேண்டும் என்றுதான் முறையிடுகிறார்கள். ஏற்கெனவே அவர்கள் பி.டி. ஆசிரியர்களுக்கு ஒப்பாகக் கருதப்படுவதால், அவர்கள் பி.டி. படிக்காவிட்டாலும், மொழி ஆசிரியர் பயிற்சி பெற்றிருப்பதால், ஊக்க ஊதிய உயர்வு அவர்கள் புலமையை அதிகப்படுத்துவதற்கு ஊக்குவிப்பதாகும். அது கல்வியின் தரத்தை உயர்த்த உதவும் என்பதைக் கருதி, தமிழாசிரியர்களின் இந்தக் கோரிக்கையை அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இப்போதிருக்கும் சட்டமுறைப்படி, 'பி.டி.' அல்லது 'பி.ஈடி.' படித்தவர்கள் பிறகு எம். ஏ. பட்டம் பெற்றால் அவர்களுக்கு 2 ஊக்க ஊதிய உயர்வு கொடுக்கலாம் என்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல் முதல் நிலைத் தமிழாசிரியர்களைப் பொறுத்த வரையில், விளக்கம் தரப்படுகிற காரணத்தால், அவர்கள் எம்.ஏ. தகுதியைப்பெறும்போது, அவர்களுக்கும் 2 ஊக்க ஊதிய உயர்வு கொடுக்கப்பட வேண்டுமென்ற வாதம் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. அதில் நியாயமிருக்கிறது என்றுதான் அது ஆராயப்பட்டு வருகிறது. அதுபற்றிய முடிவெடுத்து, அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. எம். ராஜா அய்யர் : துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். தற்பொழுது இருக்கும் நிலைமையை உத்தேசித்து தமிழ் ஆசிரியர்களின் தகுதிகளையெல்லாம் மறு பரிசீலனை செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். செகண்டரி டிரெயினிங் முடித்து வித்வான் பட்டம் பெற்றால், அவர்கள் தகுதி வாய்ந்த முதல் நிலைத் தமிழாசிரியர்களாக நியமிக்கப்படுகிறார்கள். ஆனால் செகண்டரி கிரேடு முடித்துக் கொண்டு, பி.ஓ.எல்., பி.ஏ. பட்டம் பெற்றால், அவரை முதல் நிலைத் தமிழாசிரியராகக் கருத முடியாது என்று சொல்லுகிறார்கள். பி.ஓ.எல். படித்தாலும், வித்வான் படித்தாலும், இரண்டையும் ஒன்றாக அரசு கருதுமா என்று அறிய விரும்புகிறேன். தற்போது

4-40 p.m.

[27th August 1970

செகண்டரி கிரேடு டிரெயினிங் முடித்துவிட்டு, பி.ஏ. அல்லது பி.ஓ.எல். பாஸ் செய்தாலும், பி.டி. பட்டம் பெற்ருலொழிய, அவர்கள் முதல் நிலைத் தமிழாசிரியர்களாக ஆகத் தகுதியில்லை என்று இருக்கிறது. ஆனல் பயிற்சி பெற்று வித்வான் பட்டம் பெற்றவர்கள் இப்போது முதல் நிலைத் தமிழாசிரியர்களாக வரும் நிலை இருக்கிறது. எனவே இந்தப் பாகுபாட்டைப் போக்கி, அதேபோல் தமிழாசிரியர்களும் ஏம். ஏ. பட்டம் பெற்ருல், அவர்களுக்கும் 'இன்செண்டிவ் இன்கிரிமெண்ட்' கிடைக்கும்படி வழி செய்ய வேண்டும். எனவே தமிழாசிரியர்களின் தகுதியைப் பொறுத்த வரையில், அரசாங்கம் மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போல், அது தனியாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றுதான். பி.ஏ., பி.டி. படித்தவர்கள் பள்ளி ஆசிரியர்களாக வரலாம் என்று தற்போது வைத்திருக்கிருேம். பி.ஏ. பட்டம் போதும் என்ற நிலையிலும் சிலர் எம்.ஏ. படித்துவிட்டு எம்.ஏ, பி.டி. எம்.ஏ., பி.ஈடி., என்ற தகுதியோடு ஆசிரியர்களாக வருகிருர்கள். எனவே இவர்களுக்கு 2 ஊக்க ஊதிய உயர்வு கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. முதல் நிலைத் தமிழாசிரியர்கள் பி.ஏ.,பி.டி.க்கு இணையாக ஆக்கப்பட்டுவிட்டதால், அந்தத் தமிழாசிரியர்கள் எம்.ஏ. பட்டம் பெறும்போது அவர்களுக்கும் 2 ஊக்க ஊதிய உயர்வு தரப்பட வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது. இந்தக் கோரிக்கையில் நியாயம் இருக்கிறதென்பதை அரசாங்கம் ஆராய்ந்து அதற்கு ஏற்றபடி விதிகளைத் திருத்த வேண்டியிருக்கிறது. அது ஆய்வில் இருந்து வருகிறது.

திரு. சா. கணேசன் : இந்தக் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் கூறியதிலிருந்து கல்லூரிக்கும் பள்ளிகளுக்கும் வேண்டிய தகுதி அடிப்படையின் நிர்ணயம் சிறிது மாறுகிறது என்று நான் யூகிக்கிறேன். பள்ளியில் உள்ள பி.டி. பட்டம் பெற்றவர்கள் கற்பிக்கும் முறை பற்றிய பயிற்சி பெற்றவர்கள். ஆனல் எம். ஏ. பட்டம் பெற்றவர்களோ அந்தத் துறையில், மொழியில் நிபுணத்துவம் பெற்றவர்களேயன்றி, கற்பிப்பதில் பயிற்சியற்றவர்கள். அப்படித் தமிழ் எம். ஏ. வுக்கு ஊக்க ஊதிய உயர்வு கொடுப்பது என்ருல், சரித்திரம், சமஸ்கிருதம், அரசியல் துறையில் எம்.ஏ. பட்டம் படித்தவர்களுக்கும் இந்த அடிப்படையில் ஊக்க ஊதிய உயர்வு கொடுக்க வேண்டும் நிலை ஏற்படும். இதன் காரணமாக பள்ளிகளில் பி.எட்., அல்லது பி.டி., அல்லது எல்.எட்., படிப்பு வேண்டாம் பி.ஏ., எம்.ஏ. போதும் என்ற நிலைமை ஏற்பட்டுவிடாதா என்று சிந்திக்கவும் வேண்டும். அப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் அரசு சிந்திக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தமிழ்த் துறையைப் பொறுத்த வரைதான் இந்த நிலையே தவிர மற்ற வரலாறு, கணக்கு, மொழிப் பாடங்களில் பி.ஏ., எம்.ஏ. படித்துத்தான் ஆசிரியராக வர வேண்டும். பி.ஏ., எம். ஏ. படித்தவர்கள் கட்டாயம் பி.டி., அல்லது பி.ஈடி. பட்டமும் பெற்றிருக்க வேண்டும். தமிழாசிரியர்கள் செகண்டரி

27th August 1970]

கிரேடு முடித்துவிட்டு, வித்வான் பட்டம் பெற்று ஆசிரியர்களாக வந்து விடுகிறார்கள். 10, 15 ஆண்டுகள் தமிழாசிரியர்களாக இருந்து மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும்போதே நல்ல அனுபவம் பெற்று, தனியாக பிறகு பரீட்சை எழுதி, பி.ஏ., எம்.ஏ. பட்டம் பெற்று விடுகிறார்கள். அந்த மாதிரிப் படித்து எம்.ஏ. தகுதி பெற்றவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு அளிக்கப்பட வேண்டும் என்று கோருகிறார்கள். அவர்களுக்கு இருக்கும் 10, 15 வருஷ அனுபவத்தோடு மீண்டும் பி.டி. படித்துத்தான் இந்த ஊக்க ஊதிய உயர்வுக்குத் தகுதியுள்ளவர்களாக வேண்டும் என்று இல்லாமல், அவர்களுக்கும் எம்.ஏ. தகுதி இருந்தால், இரண்டு ஊக்க ஊதிய உயர்வு கொடுக்கப்படவேண்டும் என்று கோருகிறார்கள். அது ஆராயப்பட்டு வருகிறது.

திரு. கே. அறிவழகன் : பி.ஏ., பி.டி. படித்து பிறகு எம்.ஏ. பட்டம் பெற்றவர்களுக்குத்தான் ஊக்க ஊதிய உயர்வு என்றிருக்கிற காரணத்தால், பி.ஏ (ஆனர்ஸ்) படித்தவர்கள் பின்னால் எம்.ஏ. பட்டம் பெற்றால், அவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு இல்லை என்று அரசு அலுவலர்கள் தெரிவிக்கிறார்கள். எனவே பி.ஏ., பி.டி. பட்டம் பெற்ற பிறகு, எம்.ஏ. பட்டமும் பெற்றுத் தகுதி பெறுகிறவர்களுக்குத்தான் 2 ஊக்க ஊதிய உயர்வு என்றிருப்பதை மாற்றியமைத்து ஊக்க ஊதிய உயர்வு பெறுவதற்கான தகுதிகளை மீண்டும் அரசு நிர்ணயிக்குமா ? அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, மான்யம் பெறும் ஆசிரியர்களைப்பற்றிய பல்வேறு விஷயங்களைக் குழுவிடம் தந்திருப்பதாகச் சொன்னார்கள். மான்யம் பெறும் ஆசிரியர்கள் துறைபற்றி ஆராய்கிற குழுவுக்கு என்ன என்ன காரியங்களை அக்குழுவினர் செய்ய வேண்டும் என்று மறுபடியும் தொகுத்துக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற நிலைமை தற்போது இருக்கிறதா என்ற தகவல் என்னிடம் இல்லை. அதாவது பி.ஏ. (ஆனர்ஸ்) படித்து பிறகு எம்.ஏ. தகுதி பெற்றால், அவர்களுக்கு 2 ஊக்க ஊதிய உயர்வு உண்டா இல்லையா என்ற தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதன் நிலை என்ன என்று அறிந்து இந்த மன்றத்திற்குத் தெரிவிக்கலாம்.

அமைக்கப்பட்டிருக்கும் குழு பணி முறையைப் பற்றிக் கூறுவதோடு மட்டுமில்லாமல், உயர்நிலைப் பள்ளிகள், கீழ் துவக்கப் பள்ளிகளின் விதிமுறைகள் பற்றியும் ஆராய்ந்து சொல்லலாம் என்றுதான் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

THIRU A.R. DAMODARAN : Sir, this proposal to give advance increments to certain Pandits who have qualified for B.A. or M.A., if I am to understand the Minister correctly, would then apply to all Sanskrit and Hindi Pandits also and to those S.S.L.C. passed teachers who may get B.A. or M.A. degree by private study. May I know from the Government whether this facility would be extended to all such persons who would appear for B.A. or M.A. examination and pass that by private study, as in the case of Tamil Pandits or whether it would be done only in the case of Tamil Pandits?

[27th August 1970

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் : முதல் நிலைத் தமிழாசிரியர்கள்தான் தற்போது பி.ஏ., பி.டி. படித்த ஆசிரியர்களுக்கு இணையாகக் கருதப்படுகிறார்கள். அதே அளவுக்கு சமஸ்கிருத, இந்தி பண்டிட்கள் இருந்து அவர்களும் பிறகு எம்.ஏ. பட்டம் பெற்றால், அவர்களுக்கும் தமிழாசிரியர்களுக்கும் கொடுக்கும் இச்சலுகையைக் கொடுக்கலாம். தற்போது தமிழாசிரியர்களுக்கே இந்தத் தடை இருக்கிறது. இந்தத் தடை நீக்கப்பட்ட நிலையில் இந்தத் தடை இந்தி, சமஸ்கிருத ஆசிரியர்களுக்கும் இருந்தால் அவர்களுக்கும் அது நீக்கப்படும்.

திரு. சா. கணேசன் : இப்போது எம்.ஏ. படித்தவர்கள் என்ற பொருளில்தான் இருக்கிறது. அவர்கள் ஏற்கெனவே செகண்டரி கிரேடு டிரெயிண்டாக இருந்தால் ஆட்சேபணையில்லை. செகண்டரி கிரேடு டிரெயினிங் இல்லாமல், வித்வான் பரிட்சை மட்டும் பாஸ் செய்து விட்டு, அதற்குப் பிறகு பி.ஏ. படித்து துறையில் அனுபவமும் மொழியில் திறமையும் பெறுகிறார்களே தவிர, பயிற்றுவிக்கும் பயிற்சியில்லாமலேயே போய்விடுகிறது. ஆகவே செகண்டரி கிரேடு டிரெயினிங் அல்லது வேறு எந்த டிரெயினிங்காவது பெற்றிருந்து அவர்கள் பிறகு எம்.ஏ. தகுதி பெற்றால், அவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு கொடுப்பதில் நியாயம் இருக்கும். அப்படியில்லை என்றால், பி.ஏ. பாஸ் செய்து விட்டு 9 மாதத்தில் பி.டி. பாஸ் செய்துவிடலாம். டிரெயினிங்குக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். குறைந்த பட்சம் செகண்டரி கிரேடு டிரெயினிங்காவது முடித்திருக்கிறார்களா அல்லது பண்டிட் டிரெயினிங்காவது முடித்திருக்கிறார்களா என்று பார்த்து அரசு முடிவெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்து தெரிவித்தார்கள். அதையொட்டி ஒரு விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். வெறும் எம்.ஏ. பட்டம் பெற்றவர்களுக்கு மட்டும் எப்படி 'இன்சென்டிவ் இன்கிரிமெண்ட் கொடுக்கமுடியும்' என்றார்கள். தற்போது தமிழாசிரியர்களாக இருப்பவர்கள் பயிற்சி பெறாதவர்களாக இருக்க முடியாது. ஒன்று தமிழ் பண்டிட் டிரெயினிங்காவது இருக்க வேண்டும் அல்லது செகண்டரி கிரேடு டிரெயினிங்காவது இருக்க வேண்டும். பயிற்சி பெறாத ஆசிரியர் யாரும் இப்போது தமிழ் நாட்டில் இருக்க முடியாது. எல்லோரும் ஏதோ ஒரு வகையில் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களாகத்தான் இருக்க முடியும். பயிற்சி பெறாமல் கல்லூரி ஆசிரியர்கள் வேண்டுமானால் இருக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் கூறிய கருத்தினைத்தான் நானும் சொல்வதாக இருந்தேன். தமிழாசிரிகளாக வருகிறவர்கள் செகண்டரி கிரேடு பயிற்சியோ, தமிழாசிரியர் பயிற்சியோ அல்லது பி.டி. பயிற்சியோ பெற்றுதான் ஆசிரியர்களாக வருகிறார்கள். எனவேதான் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் பயிற்சி இருக்கிறது என்ற வகையில் அவர்கள் முதல் நிலைத் தமிழாசிரியர்களாக எண்ணப்படுகிறார்கள்.

27th August 1970]

திரு. எஸ். முத்துசாமி : தமிழாசிரியர்களாகப் பட்டம் பெறுகிறவர்கள் சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களில் படித்துப் பட்டம் பெறும் பட்டப் படிப்புக்கு, பி.ஏ., பி.எஸ்ஸி-க்கு இணையானவர்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் : இப்போது வித்வான் பட்டம் பி.ஏ. பட்டத்திற்குச் சமம் என்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனால் வித்வான் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் முதல் நிலை தமிழாசிரியர்களாக, பி.டி. ஆசிரியர்களுக்கு இணையாக வைத்தெண்ணப்படுகிறார்களே தவிர, அவர்கள் 'குவாலிபிகேஷன்' பி.ஏ., பி.எஸ்ஸிக்கு இணையானது என்ற அளவுக்கு பல்கலைக் கழகத்தால் ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஆனாலும் தமிழாசிரியரின் பொறுப்புக்களை பி.டி. ஆசிரியர்களின் பொறுப்புக்குச் சமமானதாக வைத்திருக்கிறோம்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : உயர்நிலைப் பள்ளிப் படிப்போடு தமிழாசிரியர் பதவிக்கு வர முடியாது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆனால் அப்படி ஆசிரியர் பயிற்சியோ வித்வான் பட்டமோ இல்லாதவர்களை இரண்டாவது நிலை தமிழாசிரியர்களாக நியமிக்கலாம், நியமிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

S.S.L.C. Public Examination

*16. *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether there is any High School in our State in which no student had passed in the S.S.L.C. Public Examination in March 1969 ; and

(*b*) if so, the names of those schools ?

எஸ். எஸ். எல். சி. தேர்வு

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1969 மார்ச்சு மாதம் நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் ஒரு மாணவருங்கூட வெற்றி பெறாத உயர்நிலைப் பள்ளிகள் நமது மாநிலத்தில் உண்டா ?

(இ) ஆம் எனில், அவற்றின் பெயர்கள் யாவை ?